பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 26 செவ்வாய்க்கிழமை (09.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :163

## அதி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த உடன் நடவடிக்கை எடுக்குக!

### யாழ். அரச அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, மே 9

யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த நிலையிலிருக்கும் 7, 456 குடும்பம் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுக்குமாறும், அதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும் உயர் நீதிமன்றம் நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபருக்கு உத்தரவிட்டது.

இந்த மீள்குடியேற்றம் குறித்து முப்படைத் தளபதிகளுடனும் மற்றும் பொலீஸ்மா அதிபருடனும் பேச்சு நடத்துமாறும், இது தொடர்பிலான அறிக்கையொன்றை ஜூலை 24ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறும் உயர்நீதிமன்றம் யாழ். அரச அதிபரைப் பணித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை ஆட்சேபித்துத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் காசிப்பிள்ளை யோகேஸ்வரன் ஆகியோர் தாக்கல்செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் பிரதம

(4ஆம் பக்கம் பார்க்க)

# கருணா குழுவின் ஆயுதக் களைவை புலிகளே மேற்கொள்ளும் நிர்ப்பந்தம்!

## வேறு மாற்று வழியே கிடையாது என்கிறார் பாலா!

## அதைச் செய்தபின்தான் பேச்சு எனவும் தெரிவிப்பு!!

கொழும்பு, மே 9

**"அரச படைகளின் ஒத்தாசையோடு ஒட்டுப்படையாக இயங்கும் கருணாவின் தலைமையிலான ஆயுதக் குழுவினரிடமிருந்து ஆயுதங்களைக் களைந்து, அவர்களை நிர்மூலமாக்கும் முழுப் பொறுப்பையும் தாங்களே கையேற்பதைத் தவிர விடுதலைப் புலிகளுக்கு வேறு மாற்றுவழி கிடையாது" - என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞரான அன்ரன் பாலசிங்கம், 'ரொய்ட்டர்' செய்திநிறுவனத்துக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.**

"அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கருணாவின் தலைமையிலான ஆயுதக்குழு எதுவும் இராணுவத்துடன் சேர்ந்து செயற்படுவது இல்லை என்று அரசாங்கம் மறுத்துள்ளது.

ஆனால், விடுதலைப் புலிகளோ இதனை நம்பத் தயாரில்லை. கருணா அணியினர் இராணுவத்தின் உதவியுடன் எமது போராளிகளைக் கொன்று வருகிறார்கள் என்பது தெரிந்த விடயம். படையினரும், இந்த ஒட்டுப்படைகளின் ஒத்தாசையோடு தமிழ் மக்களைச் சாகடிக்கிறார்கள். இதனை ஒழித்துக் கட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

### எண்மர் குறித்து தகவல் இல்லை!

தென்மராட்சி மந்துவில் பகுதியில் காணாமல்போன இளைஞர்கள் எண்மர் குறித்து மேலதிக தடயங்கள் எவையும் நேற்றுமாலைவரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களது சடலங்கள் எவற்றையும் தாம் காணவில்லையென்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் மந்துவில் கிழக்குப் பகுதியில் பொது மக்கள் நூற்றுக்கணக்கானோர் நேற்று முன்தினம் தேடுதல் வேட்டை நடத்தினர்.

கண்காணிப்புக் குழுவினர் நேற்றுக் காலை அங்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர். கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்கு பொதுமக்கள் நடந்ததை விவரித்தனர். காணாமல்போன எண்மரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதக்கூடிய வகையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஏ-9 பாதை நேற்றுமாலை திறப்பு

யாழ்ப்பாணம், மே 9

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரால் நேற்றுப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை அடுத்து மூடப்பட்டிருந்த ஏ-9 பாதையின் முகமாலை நுழைவாயில் நேற்று மாலை திறக்கப்பட்டது.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதை யடுத்து பாதை திறக்கப்பட்டது என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கால் முற்றாக மூச்சடங்கியது குடாநாடு!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படைத் தரப்பினரால் - பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவினால் நேற்று முழுக் குடாநாடுமே முற்றாக மூச்சடங்கி வெறிச்சோடிப்போனது.

நேற்றுக் காலை முதல் மாலை வரை மக்கள் எவரும் வீதிக்கு இறங்காமல் தத்தமது வீடுகளுக்குள்ளேயே முடங்கி இருந்து விட்டனர். பிரதான வீதிகள், சந்திகள், சந்தைகள் என்று பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் நேற்று ஈகூட ஆடவில்லை. மாலைவரை வீதிகளில் பொதுமக்கள் நடமாட்டத்தை மருந்துக்கும் காணமுடியவில்லை பிராந்திய செய்தியாளர்கள் அனைவரும் தகவல் தெரிவித்தனர். என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. எங்கும் ஒரே மயான அமைதி நிலவியது.

வீதிகளில் இராணுவத்தினர் சாரை சாரை

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையும் அங்கத்துவம் கோரும்!

கொழும்பு,மே9

ஐ.நா. சபையில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கின்ற மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கும் அங்கத்துவம் வழங்குமாறு கோருவதற்கு அரசு முடிவுசெய்திருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்குப் பதிலாக 'ஐ.நா. மனித உரிமைகள் சபை' என்ற அமைப்பு உருவாக்கப்படவிருக்கின்றது.

இச்சபையில் 47 நாடுகளுக்கு உறுப்புரிமை வழங்கப்படவுள்ளது. ஆசியப் பிராந்திய நாடுகளுக்கு 13 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த 13 இடங்களுக்குள் இலங்கையையும் இணைத்துக்கொள்ளுமாறு கோருவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டிருக்கின்றது.

இதற்கான ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டிருக்கின்றது.

இந்த மனித உரிமைகள் சபைக்கான தேர்தல் இன்று நியூயோர்க்கில் இடம் பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-க)

## திருமலையில் ஒட்டுப்படைகளின் தாக்குதல் முயற்சி முறியடிப்பு!

### புலிகளால் ஆயுதங்களும் மீட்பு

திருகோணமலை, மே 9

திருகோணமலையில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவி ஒட்டுப் படையினரும் இராணுவத்தினரும் நடத்திய தாக்குதலை பதில் தாக்குதல் நடத்தி முறியடித்துள்ளனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமில் இருந்து வந்து ஊடுருவித் தாக்க முயன்றவர்களே தாக்கி விரட்டப்பட்டனர் என்று புலிகள் கூறினர். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரவு 11.00 மணியளவில் தாக்குதல் நடத்தியவண்ணம் புலிகள் பகுதிக்குள் ஊடுருவ முயன்ற ஒட்டுப்படையினரும் இராணுவத்தினரும் தமது பதில் தாக்குதலை அடுத்து முயற்சியைக் கைவிட்டு கட்டைப்பறிச்சான் முகாம் நோக்கித் தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்களால் கைவிடப்பட்ட ஏ.கே.எல்.எம்.ஜி. -02, ஏ.கே. துப்பாக்கிகள் -06, ஆர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவிலில் இராணுவம் குவிப்பு?

யாழ்ப்பாணம், மே9

பலாலியில் நிலைகொண்டிருந்த படையினரில் பெருமளவு எண்ணிக்கையான படையினர் வாகன அணிகளாக யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி வழியாக வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோவில் காவல் முன்னரங்குப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை முதல் போய்க் கொண்டிருக்கின்றனர் எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பலாலியிலிருந்து அச்சுவேலிச் சந்திக்கு பத்து பதினைந்து வாகனங்களில் அணியாக வந்து யாழ்.- பருத்தித்துறை வீதி வழியாக வடமராட்சியை நோக்கி அவர்கள் சென்றனர் எனக் கூறப்பட்டது. ஞாயிறு நள்ளிரவு முதல் நேற்று திங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# யாழ். நிலைமையும் அகாஷி விஜயமும்

யாழ்ப்பாணத்தில் நிலைமை மோசம் அடைந்து வருகிறது. அப்பாவி இளைஞர்கள் தினமும் சுட்டுக் கொல்லப்பட்டு வருகின்றனர். யாழ். மந்துவிலில் எட்டு இளைஞர்களுக்கு ஏற்பட்ட கதி குடாநாட்டையே பீதியில் உறைய வைத்திருக்கிறது.

குடாநாட்டில் தினமும் நடைபெறும் படுகொலைகள், படுகொலைகளை நிறுத்தக்கோரி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட பணிப் புறக்கணிப்பு, நேற்று படையினரால் அமுல் செய்யப்பட்ட ஊரடங்கு, சுற்றி வளைப்புகள் என்பன யுத்த நெருக்கடி ஒன்றுக்குள் நாடு சென்று கொண்டிருப்பதை உணர்த்துகின்றன.

வன்முறைகள் கட்டுமீறிக் கொண்டிருக்கும் தற்போதைய நிலையில், இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷியின் வருகை நெருக்கடி நிலையைத் தளர்த்த உதவுமா என்பது சந்தேகமே.

புலிகள் மீண்டும் பேச்சுக்குத் திரும்புவதற்கு ஜப்பான் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று அரச தரப்பு அகாஷியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் இணைத் தலைமையிடமும் இதேபோன்ற கோரிக்கையே அரசினால் விடப்பட்டுள்ளது. தற்பொழுது இந்தியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், இந்தியத் தலைவர்களுடன் நடத்தப்போகும் பேச்சின்போது இதனையே வலியுறுத்தவுள்ளார். பேச்சு நடத்துவதற்குப் புறச் சூழ்நிலை எவ்வளவு முக்கியம் என்பதை சர்வதேசம் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

வடக்கு - கிழக்கில் அரசு இராணுவத் தர்பார் நடத்திக் கொண்டு, புலிகள்தான் பேச்சுக்கு வராமல் குழப்புகிறார்கள் என்ற ஒரு தோற்றத்தை சர்வதேசத்தின் மத்தியில் ஏற்படுத்துவதில் முனைப்பாக இருந்து வருகிறது.

அகாஷி இன்று வன்னி சென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. தற்போதைய நெருக்கடி நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதை அகாஷி புரிந்துகொள்ள வேண்டும். வன்னி சென்று, பேச்சுக்குச் செல்லுங்கள் என்று புலிகளைக் கேட்பதில் பயன் இல்லை.

கிழக்கில் உள்ள புலிகளின் தளபதிகளும், பொறுப்பாளர்களும் வன்னி செல்வதற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கெடுபிடிகளுக்கு அப்பால், ஒட்டுக்குழுக்கள் ஆயுதம் களைய மறுப்பதும் படையினர் புரியும் கண்மூடித்தனமான இனப்படுகொலைகளுமே தற்போது நாட்டை யுத்தத்தின் விளிம்பிற்குக் கொண்டு வந்து விட்டிருக்கின்றன. சமாதான சூழலுக்கு இவையே முக்கிய தடை.

தற்பொழுது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டும். ஜெனிவாவில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் பேச்சில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை அமுல் செய்வதில் அரசு சிறிதளவாவது அக்கறை செலுத்தவில்லை.

2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செம்மையாக அமுல் நடத்துவது பற்றி ஆராய்வதற்கே ஜெனிவாவில் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. அதில் முக்கியமானது ஒட்டுக்குழுக்களின் ஆயுதக் களைவு. ஜெனிவாப் பேச்சுக்களில் அரசு அதற்கு இணங்கி விட்டு தற்போது அதனைச் செயற்படுத்தத் தவறிவிட்டது. அதுமட்டுமல்ல, ஒட்டுக்குழுக்கள் (துணைப்படைகள்) என்று தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எதுவுமே இல்லையென்றும் கூறி விட்டது.

ஆகவே, அகாஷி வந்தாலும் தற்போதைய நெருக்கடி தீருவதற்கான அறிகுறி எதுவும் இல்லை. படையினரின் இனப்படுகொலைகள் நீடிக்குமானால் தமிழ் இளைஞர்கள் தமக்குப் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லும் நிலைமை ஏற்படலாம்.

''ஸ்ரீலங்கா அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் தமிழ் இளைஞர்களைத் திட்டமிட்டுக் கொலை செய்யும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர். எனவே, இந்தத் திட்டமிட்ட படுகொலைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வன்னி போன்ற பாதுகாப்பான பகுதிகளுக்கு அவர்கள் செல்ல வேண்டும்.'' - என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் அறிக்கை மூலம் கோரிக்கை விடுத்திருக்கிறார். இதன் விளைவுகளை மஹிந்தர் புரியாமல் இருப்பதுதான் ஆச்சரியம் அளிக்கிறது.

# புலிகள் பகுதிக்கான பாதைகள் நேற்று மீண்டும் மூடப்பட்டன!

## திடீர் நடவடிக்கையால் மக்கள் அல்லோலகல்லோலம்!

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள - வன்னிப் பிரதேசத்துக்குச் செல்வதற்கான பாதைகள் அனைத்தும் படையினரால் நேற்று மீண்டும் மூடப்பட்டன.

ஏ - 9 (கண்டி வீதி) பிரதான வீதியில் ஓமந்தை, முகமாலை சோதனைச் சாவடிகளும், மடு, உயிலங்குளம் பாதைகளும் நேற்று முழு நாளும் திறக்கப்படவேயில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தப் பாதைகள் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கின்றன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இந்தப் பாதைகள் மூடப்படுவது சம்பந்தமாக முன்னரே அறிந்திருக்காததால் மக்கள் நேற்றுக் காலை வன்னிப் பகுதியிலிருந்து வேறு மாவட்டங்களுக்கும் - அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வன்னிக்கும் செல்வதற்காக அந்தந்தச் சோதனைச் சாவடிகளுக்குச்சென்று காத்திருந்தனர். எனினும், பாதைகள் திறக்கப்படாததால் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

முகமாலை சோதனைச் சாவடியும் நேற்று மூடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்ததால் பொதுமக்கள் எவரும் வீதிக்குவரவில்லை; போக்குரத்தும் இடம்பெறவில்லை.

படைத்தரப்பினர் திடீரென - முன்னறிவிப்பு ஏதுமின்றி - பாதைகளை மூடிவிட்டதால்; ஏற்கனவே அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வன்னிக்கும், வன்னிப் பிரதேசத்திலிருந்து ஏனைய மாவட்டங்களுக்கும் சென்றிருந்த மக்கள் தத்தமது இடங்களுக்குத் திரும்ப முடியாமல் அல்லோலகல்லோலப்பட்டனர் என்று அங்கிருந்து எமது பிரதேச செய்தியாளர்கள் தகவல்கள் தெரிவித்தனர்.

இதேவேளை -

கடந்த 27ஆம் திகதி கொழும்பில் இராணுவத் தலைமையக வளாகத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து வன்னிக்கான சகல பாதைகளையும் படையினர் மூடியிருந்தமையும் பின்னர் ஒரு சில தினங்களில் மீண்டும் பாதைகள் திறக்கப்பட்டு மக்கள் போக்குவரத்துக்கு அவை அனுமதிக்கப் பட்டமையும் தெரிந்தவையே. (ம-க)

# அமைதிப் பேச்சுக்குத் திரும்புமாறு புலிகளுக்கு ஜப்பான் அழுத்தம்!

## கொடுக்கும் என்கிறார் அகாஷி

கொழும்பு, மே 9

வன்முறைகளைக் கைவிட்டு அமைதிப் பேச்சுகளுக்குத் திரும்புமாறு ஜப்பான் முழுமையான அழுத்தமொன்றை விடுதலைப் புலிகளுக்கு வழங்குமென்று இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

அமைதிப் பேச்சுகளை முன்னெடுப்பது குறித்து பேச்சு நடத்துவதற்காக கொழும்பு வந்துள்ள யசூசி அகாஷி நேற்றுக்காலை அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து நீண்ட நேரம் பேசினார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அரச சமாதான செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித கோஹென்ன ஆகியோரும் கலந்து கொண்ட இந்தச் சந்திப்பில், ஸ்தம்பித்திருக்கும் அமைதிப் பேச்சுகளை முன்னெடுப்பது குறித்தே விரிவாகப் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அரசு பல விட்டுக்கொடுப்புகளை செய்து வருகின்றபோதும் விடுதலைப் புலிகள் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் அப்பட்டமாக மீறி வன்முறைகளில் ஈடுபட்டு வருகிறனர் என ஜனாதிபதி இந்த சந்திப்பின்போது குற்றஞ்சாட்டினார்.

வன்முறைகளை நிறுத்தி புலிகளை பேச்சு மேசைக்குக்கொண்டு வருவதற்காக சர்வதேச சமூகம் குறிப்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் கடும் அழுத்தத்தைப் புலிகளுக்கு வழங்க வேண்டுமென்றும் ஜனாதிபதி இந்தப் பேச்சின்போது வலியுறுத்தினாரெனக் கூறப்படுகிறது.

அதிகரித்துவரும் வன்முறைகள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கும் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி. இன்றைய தினம் தாம் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்திக்கும்போது பேச்சுக்குத் திரும்புவதற்கான அழுத்தத்தை அவர்களுக்கு வழங்க விருக்கிறாரெனக் கூறியிருக்கிறார். (ம-க)

# புதிய பாதுகாப்புச் சட்டங்கள் குறித்து பாராட்டுகிறது தேசப்பற்று இயக்கம்

## ஜனாதிபதியுடன் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, மே 9

'அமைதிப் பேச்சுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அரசு, நாட்டின் தேசியப் பாதுகாப்புக் குறித்தும் கூடிய கவனம் செலுத்தவேண்டும்'

- இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அவசர கோரிக்கை விடுத்திருக்கிறது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் முக்கியஸ்தர்களான குணதாஸ அமரசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ உட்பட்ட பிரமுகர்கள் நேற்றுக்காலை ஜனாதிபதியை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசினர்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் அமைதி முயற்சிகளின் நிலைமை குறித்து ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் விளக்கமளித்தார். நாட்டின் தேசிய பாதுகாப்புக்கருதி அரசு கொண்டுவரவுள்ள சட்டங்கள் குறித்து இங்கு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் தமது பாரட்டைத் தெரிவித்தனர்.

அமைதி முயற்சிகள் மற்றும் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற போர்வையில் புலிகள் தாக்குதல்களை நடத்திவருகின்றனர் என இங்கு குற்றஞ்சாட்டிய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்; தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசு முழு அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வற்புறுத்தித் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தச் சந்திப்புக் குறித்து ஜனாதிபதி செயலகம் நேற்று மாலை அறிக்கையொன்றை விடுத்தது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

தற்போது உருவாகியுள்ள நிலைமையில் ஜனாதிபதி புரிந்துணர்வுடனும், மதிநுட்பத்துடனும் செயற்படுவது குறித்து தமது பாராட்டைத் தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பிரதிநிதிகள் அதற்காகத் தமது பூரண ஒத்துழைப்பைத் தருவர் எனவும் தெரிவித்தனர்.

வடக்கு - கிழக்கில் நடந்த சில சம்பவங்கள் குறித்து சர்வதேச ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பாக மேற்கொள்ளும் பிரசாரங்கள் பற்றி இப்பிரதிநிதிகள் விளக்கமளித்தனர். உள்ளூர் ஊடகங்கள் அரச தலைவருக்கும், பாதுகாப்புத் துறைக்கும் ஊறு விளைவிக்கக் கூடிய விதத்தில் செய்திகளை வெளியிடுவதன் மூலம் நாட்டிற்கு ஏற்படக்கூடிய அபாயகரமான நிலைமை பற்றியும் அவர்கள் இவ்விடத்தில் சுட்டிக்காட்டினர்.

இன்னல்களை எதிர்நோக்கியுள்ள கிராமப்புற விகாரைகள் உட்பட அனைத்து சமய வழிபாட்டுத் தலங்களினதும் தேவைகளைத் தேடிப்பார்த்து அவற்றை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான செயற்றிட்டமொன்று தற்போதிருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், இச்செயற்பாடுகளுடன் அனைத்து அரசியல் கட்சிகளும், கட்சித்தலைவர்களும் நேரடியாகத் தொடர்புகொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியும் இங்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

அதேபோன்று, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமும், பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக இன்னல்களுக்குள்ளான மக்களின் துன்ப, துயரங்களைத் தேடிப்பார்ப்பதாகவும், அவற்றுக்கான நிவாரணங்களை வழங்குவதற்காகவும் பல்வேறு செயற்றிட்டங்களைத் தற்போதிருந்தே செயற்படுத்தி வருவதாகவும் இங்குகூறப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் சங்கைக்குரிய தம்பர அமில தேரர், நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ, குணதாச அமரசேகர, புத்ததாச விதானாராச்சி, டாக்டர் வசந்த பண்டார ஆகியோர் உட்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(ம-க)

**நாளை**

சித்திரை : 27
புதன்கிழமை
10.05.2006
திதி : துவாதசி
மு.ப. 09.41
நட்சத்திரம் : அத்தம்
பிற்பகல் : 05.19
சுபநேரம் : 04.24 - 05.54
ராகுகாலம் : 11.54 - 01.24

# அமைதிப் பேச்சில் புலிகளுக்கு எள்ளளவும் நாட்டம் இல்லை!

## அகாஷியிடம் ஜே.வி.பி. அண்டிவைப்பு

கொழும்பு, மே 9

''அமைதிப் பேச்சுகளுக்கான முயற்சிகளைப் புறந்தள்ளிவிட்டு விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்திவருகின்றனர். இதன் மூலம் அவர்கள் போரையே விரும்புகின்றனர்' என்பது தெளிவாகின்றது. அமைதிப் பேச்சில் அவர்களுக்கு எள்ளளவும் நர்ட்டம் இல்லை''.

- இவ்வாறு ஜே.வி.பி. நேற்றுத் தெரிவித்திருக்கிறது.

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானியத் தூதுவர் யசூசி அகாஷி நேற்று ஜே.வி.பி. முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசினார். ஜப்பானியத் தூதரகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது ஜே.வி.பி. தலைமைச் செயலாளர் ரில்வின் சில்வா தலைமையிலான எம்.பிக்கள் கலந்துகொண்டனர்.

அமைதிப் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தபோதும், புலிகள் அதனை நிராகரித்து தாக்குதல் நடத்திவருவதன் மூலம், அமைதித் தீர்வை அவர்கள் விரும்பவில்லையென்பதையே அர்த்தப்படுத்துகிறார்கள் என ஜே. வி.பி. தூதுக்குழு அகாஷியிடம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இராணுவத் தளபதி மீதான தாக்குதல் உட்படப் பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் இங்கு விடுதலைப் புலிகள் மீது குற்றம்சாட்டிய ஜே.வி.பீ. குழுவினர், விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்குத் திரும்புவது தொடர்பில் பெரும் சந்தேகத்தை வெளியிட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-க)

**உதயவாக்கு**

அற்பமான பணம் சம்பாதிப்பதற்காக நீ ஒழுக்கத்தை விற்று விடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் அமைதியான தேர்தல் 65 சதவீதம் மக்கள் வாக்களிப்பு!

சென்னை, மே9

தமிழ் நாடு மாநில சட்டப் பேரவைத் தேர்தல் வாக்களிப்பு நேற்று அமைதியாக நடந்து முடிந்தது. சுமார் 65 சதவீதமான மக்கள் வாக்களித்துள்ளனர்.

234 தொகுதிகளுக்கு நடத்தப்பட்ட இந்தத் தேர்தலில் சில இடங்களில் மட்டுமே சிறு அசம்பாவிதங்கள் நடைபெற்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 2,586 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர்.

காலை முதலே சகல இடங்களிலும் வாக்குப் பதிவு மிக மும்முரமாக நடைபெற்றது. நீண்ட வரிசையில் காத்திருந்து ஆண்களும் பெண்களும் வாக்களித்தனர். தற்போதைய முதல்வரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலருமான செல்வி ஜெயலலிதா சென்னையில் உள்ள ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் வாக்களித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முன்னாள் முதல்வருமான கலைஞர் மு.கருணாநிதி சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் வாக்களித்தார். அந்தத் தொகுதியில் அவரது மகன் ஸ்டாலின் போட்டியிடுகிறார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தனது சொந்த ஊரான கலிங்கப்பட்டியில் வாக்களித்தார். காலை 8.55 மணிக்கு வந்த வைகோ மக்களோடு வரிசையில் நின்று வாக்களித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் திண்டிவனத்தில் வாக்களித்தார். அவரது மகனும் மத்திய அமைச்சருமான அன்புமணியும் அவருடன் வந்து வாக்களித்தார்.

முற்போக்குத் திராவிட கழகத் தலைவரான நடிகர் விஜயகாந்த் சென்னையில் வாக்களித்தார். அதன் பின்னர் அவர் விருத்தாச்சலம் தொகுதிக்கு உட்பட்ட முதனைக் கிராமத்தின் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்றார். அங்கு அவர் மீது பா.ம.கவினர் செருப்புக்களை வீசினர். அதனை அடுத்து அவர் அங்கிருந்து வெளியேறினார்.

2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற பெரும் அனர்த்தமான ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் வாக்களிப்பு மும்முரமாகவும் வேகமாகவும் நடந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

வாக்களித்துவிட்டு வெளியே வருபவர்களிடம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் தி.மு.க. கூட்டணியே இந்தத் தேர்தலில் வெற்றி பெறும் என்று கூறப்பட்டுள்ளது. 'ஸ்டார்' தொலைக்காட்சி இந்தக் கருத்துக் கணிப்பை மேற்கொண்டது. அதன் முடிவுப்படி தி.மு.க. கூட்டணி 175 தொகுதிகளில் வென்று தனித்து ஆட்சியமைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கொழும்பில் தமிழர்களுக்கு அநீதி நடந்தால் மேலக மக்கள் முன்னணி தட்டிக்கேட்கும்!

### மனோ கணேசன் எம்.பி.கருத்து

''சந்திரனையும், சூரியனையும் கொண்டுவந்து தருவேன் என்று சொல்லி ஏணிச் சின்னத்திற்கு வாக்களிக்கும்படி நான் மக்களை கேட்கவில்லை. இதுவரையில் நான் செய்ததைச் சொல்லி அதை ஞாபகப்படுத்தித்தான் வாக்கு கேட்கின்றேன். கொழும்பிலே தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படும்பொழுது தட்டிக்கேட்கும் சக்தியாக நாம் இன்று இருக்கின்றோம். இருந்தபோதிலும் இன்னமும் இங்கே தமிழருக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. இந்நிலையில் எனது கரங்கள் இன்னமும் பலமுள்ளதாக மாறுமானால், எனது கட்சி அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் கட்சியாக மாறுமானால் எம்மால் இன்னமும் உறுதியாக அநீதிகளைத் தட்டிக்கேட்க முடியும்''

- இவ்வாறு மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பு, நாகலகம் வீதி, செக்குத் தோட்டத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார். வேட்பாளர் எஸ்.செல்வராஜா ஏற்பாடு செய்திருந்த இக்கூட்டத்தில் மனோ எம்.பி.மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

நான் மக்கள் பணத்தைக் கொள்ளையடிப்பதில்லை. ஏழை மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இலவச கூரைத்தகடுகளை விற்றுப் பிழைக்கவில்லை. நேர்மையில்லாமல் ஒருபோதும் நடந்துகொண்டதில்லை. அது மாத்திரமல்ல, எனது கட்சியில் எவராவது நேர்மையீனமாக நடப்பார்களேயானால் உடனடியாக அவர்களைக் கட்சியிலிருந்து தூக்கியெறியத் தயங்கமாட்டேன். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் பின்னிற்க மாட்டேன். இது இன்று தலைநகர மக்களுக்கு நன்றாகத் தெரியும். உங்களது வாக்குகளைப் பெற்று மாநகரசபையில் பதவிகளைப் பெற்றுக்கொள்பவர்கள் மக்களுக்கு அயராது பணியாற்றவேண்டும் இதைச் செய்யமுடியாவிட்டால் வீட்டிற்குப் போகவேண்டும். இத்தகைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டவர்களைத்தான் நான் வேட்பாளர்களாக நியமித்திருக்கின்றேன். அத்தகைய ஒருவர் தான் எஸ்.செல்வராஜா. அவருக்கு வழங்கும் வாக்கு அநீதிக்கு எதிரான வாக்காகும். மேலக மக்கள் முன்னணி வேட்பாளர் பட்டியலில் தமிழர்கள் மாத்திரமல்லாமல் சிங்கள, முஸ்லிம் வேட்பாளர்களும் இருக்கின்றார்கள்.

எமது தமிழ் வேட்பாளர்கள் மாத்திரமல்ல. எமது கட்சியின் சகோதர இனத்து வேட்பாளர்களும் எதிர்வரும் தேர்தலில் வெற்றிவாகைசூடுவார்கள் என்பது நிச்சயம். இதன் மூலம் கொழும்பு மாநகரத்தில் தமிழ் மக்கள் அச்சமில்லாமல் சுதந்திரமாகவும், சகோதர இனத்தவர்களுடன் சமத்துவமாக சமாதானத்துடன் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவேன் - என்றார். (க)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னபூரணம் பாலசிங்கம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி)*



சாவகச்சேரி, கல்லடி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி அன்ன பூரணம் பாலசிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (07.05.2006) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு பாலசிங்கம் (முன்னாள் யாழ். கல்வித் திணைக்கள பிரதம எழுதுவினைஞரும், முன்னாள் சாவகச்சேரி நகரசபை உபதலைவரும்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவகுரு தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (சட்டத்தரணி - ராதா) மற்றும் பாலகாந்தன் (காணி நிர்வாகத் திணைக்களம், திருகோணமலை), பாலகுமாரன் (நகர சபை, சாவகச்சேரி), டாக்டர் பாலச்சந்திரன் (வாழைச்சேனை), பாலசறோஜினி (பிரான்ஸ்), பாலஜெயந்தி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), பாலஜீவினி (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி), டாக்டர் பாலசுலோஜினி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயும் மோகனேஸ்வரி (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), ஞானசோதி, மனோராஜ் (பிரான்ஸ்), செல்வமலர், டாக்டர் பூமணி (வாழைச்சேனை), விஜயகாந்தன் (அதிபர், உடுவில் மான்ஸ் த.க. பாடசாலை), டாக்டர் கருணாநந்தன் (அமெரிக்கா), சிவகுமாரன் (**Sierra**-சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமியும் பாலேந்திரன் (பொறியியலாளர் **A.G.M. Sierra**), பாலநிகேதன் (கனடா), பாலநிறஞ்சன் (ஆசிரியர், வ/விக்னேஸ்வரா ம.வி. வவுனியா), பிரியா (மாநகர சபை, தெஹிவளை), பாலவேணி (பரிஸ்ரர் லண்டன்), பாலகஜன் (பொறியியலாளர், லண்டன்), பாலநிராஜ், பாலடிஷாந், பால ஜயந்தி (புனித மைக்கல் கல்லூரி, மட்டக்களப்பு மாணவர்கள்) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் அரவிந்த் (அமெரிக்கா), டிஸ்னி (அமெரிக்கா), கஜானி (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி), நிரோஷன் (மாணவன், யாழ். இந்து ஆரம்பப் பாட சாலை), நிலக்ஷன் (மாணவன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் நிலானியின் அன்புப் பூட்டி யுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2006) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாலுகிரி, கல்லடி ஒழுங்கை,*
*சாவகச்சேரி. 0776282674,*
*0777140962, 0777492581.*

**தகவல்:**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

### திருமதி கற்பகம் செல்வநாயகம்



அல்வாயைப் பிறப்பிடமாகவும் மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கற்பகம் செல்வநாயகம் அவர்கள் நேற்று (08.05.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி மங்களாதேவி அரசலிங்கம், எஸ்.சாந்தாதேவி (ஆசிரியை, கொக்குவில் சி.சி.த.க. பாடசாலை), எஸ்.இந்திராதேவி (விரிவுரையாளர், கல்வியியல் கல்லூரி, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயும் எஸ்.அரசலிங்கம் அவர்களின் அன்பு மாமியும் அ.சுஜிதரன், செல்வி அ.சுதர்சினி (விவசாய பீடம், 4ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), செல்வி அ.கீர்த்திகா (உயர்தரவகுப்பு மாணவி, மானிப்பாய் மகளிர்), செல்வி ஜதுவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2006) செவ்வாய்க்கிழமை கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் பி.ப. 2மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணியகாரன் ஒழுங்கை,*
*கொக்குவில்.*
*தொ.பே. 0776684970.*

**தகவல்:**
**பிள்ளைகள்.**


## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும்
கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜாக்சனின்

**கிங் - கொங் King Kong**

தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய்
பயமாய் இருக்கிறது
10.30, 2.30, 6.30, 9.30 முற்பதிவு செய்துகொள்ளலாம்

## நாகம்ஸ் சுன்னாகம்

எஸ்.ஜே.சூரியா, நயன்தாரா
மற்றும் பலர் நடித்த
**கள்வனின் காதலி**
காட்சி நேரம் : 10.30, 2.30, 5.30


ஓம்
ஸ்ரீராம ஜெயம்

யாழ்ப்பாணம் - வண்ணை
**ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**
**ஏகாதசி உற்சவம் - 09.05.2006**
நிகழும் விய வருடம் சித்திரை மாதம் 26 ஆம் திகதி
பி.ப. 5.00 மணிக்கு ஏகாதசி உற்சவம் நடைபெறும்.
அடியார்கள் இந்த உற்சவத்தில் பங்குபற்றி
ஸ்ரீமந் நாராயணன் அருள்பெற்று ஸ்ரீமகாலஷ்மி
விலாச சம்பன்னாக வாழ்வீர்களாக.
**- ஆதீன மகாசபை.**

## துயரில் இணைகின்றோம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விசேட கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி இந்திரா செல்வநாயகம் அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி செல்வநாயகம் கற்பகம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் இணைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**கமலாம்பிகை ஆறுமுகத்தம்பி**
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)

**தோற்றம்** 23.05.1921
**மறைவு** 09.05.2002

''கலியுகம் என்று மக்கள் கலங்கி
நிற்கும் இவ்வேளையும் உங்களை
நினைத்து நிற்கும்''

*274, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

ராகுலன் (அம்பி-Swiss)
கங்காதரன் ராகினி (அம்மணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் நிலைகளைத் தாக்க முயன்றால் படை முகாம்கள் மீது பதிலடித் தாக்குதல்

## எழிலன் எச்சரிக்கை

விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை இராணுவத்தினர் இனிமேலும் தாக்க முயற்சித்தால், இராணுவ நிலைகளைத் தாக்கவேண்டிய நிலைக்கு விடுதலைப் புலிகள் தள்ளப்படுவார்கள் என்று திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

துணைப்படைகளை ஏவி, விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது, குறிப்பாக கட்டைப்பறிச்சான் முன்னரங்க நிலைமீது தாக்குதல் நடத்தப்பட்டால், ஸ்ரீலங்கா இராணுவத்தின் கட்டைப்பறிச்சான் முகாம் மீது, விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

கட்டைப்பறிச்சான் முகாம் மீது ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொள்ளும் தாக்குதல் குறித்து, கண்காணிப்புக் குழுவிடம் தகவல் தெரிவித்தும், அவர்கள் எதுவித நடவடிக்கையையோ, ஆய்வையோ மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில், மீண்டும் துணைப்படைகளை ஏவி, தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்ந்தும் துணைப்படைகளை வைத்துக்கொண்டு ஸ்ரீலங்கா இராணுவம் நடத்தும் நிழல் யுத்தத்தை விடுதலைப் புலிகள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். - என்றும் எழிலன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவுக்குப்பின்னர், இறால் குழிப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாம்மீதும் தாக்குதல் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தத் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது. இது குறித்தும் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்தோம். ஞாயிற்றுக்கிழமை கண்காணிப்புக் குழுவினர், அப்பகுதிக்கு வந்து இந்த முறைப்பாடு குறித்து ஆராய்ந்துள்ளனர் என்றும் எழிலன் குறிப்பிட்டார். (ம-க)

## கத்திக் குத்துக் காயங்களுடன் ஏறாவூரில் மீனவரின் சடலம்!

ஏறாவூர் புன்னைக்குடாக் கடற்பகுதியில் மீனவர் ஒருவரின் சடலம் கத்திக் குத்துக் காயங்களுடன் நேற்றுக்காலை 7.30 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் மட்டக்களப்பு களுவாங்கேணியைச் சேர்ந்த சின்னமுத்து சிவலிங்கம் (வயது - 43 ) என்பவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வீடு திரும்பவில்லையென பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றுக் காலை இவர் சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றார். (ம-க)

# புலிகளுக்கு கடல் விமானமா? ஜே.வி.பிக்குள் குத்துவெட்டு!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடல் விமானம் வழங்குவது தொடர்பான நிலைப்பாட்டில் ஜே.வி.பி. கட்சிக்குள் பாரிய உள் முரண் வெடித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுக்குக் கடல் விமானம் வழங்கினால் சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிக்கவேண்டும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுரகுமார திஸநாயக்க கட்சி உறுப்பினர்களிடையே கருத்துகளைக் கூறிவந்திருந்தார். ஆனால், அவரது கருத்தை முறியடிக்கும் வகையில் அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் செயற்பட்டு வருகிறார் என்று கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தளபதிகளைப் பாதுகாப்பாகக் கிழக்கிலிருந்து வடக்கிற்கு அழைத்து வருவதற்கு அரசு கடல் விமானத்தை வழங்கவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித்ததையடுத்து அடுத்த சில நாள்களில் நடைபெறவிருந்த சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்துக் கடல் விமான நடவடிக்கைகளைக் கைவிடுவதற்கு மஹிந்தவுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று தனது கட்சிக்கு யோசனை தெரிவித்திருந்தார் அனுரகுமார திஸநாயக்க.

ஜே.வி.பியும் அந்த யோசனையை ஏற்றது. எனினும், அதனை அறிந்த ஜனாதிபதியும் அவரின் ஆலோசகர்களும் விமல் வீரவன்ஸவை அழைத்து இந்த நிலைமையை மாற்றுமாறு கோரியுள்ளனர்.

இதனையடுத்து கட்சியின் பொதுச்செயலாளருடன் தொடர்புகொண்ட விமல்வீரவன்ஸ சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிக்கும் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

இதன் பின்னர் ரில்வின் சில்வாவின் வேண்டுகோளுக்கும், அழுத்தங்களுக்கும் அமைய அனுரகுமார திஸநாயக்க தனது யோசனையை விலக்கிக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இந்த விடயத்தில் ஜே.வி.பிக்குள் இன்னமும் கருத்து வேறுபாடுகளும் உள்முரண்பாடுகளும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-க)

## ஓட்டமாவடியில் சிப்பாய் படுகாயம்

ஓட்டமாவடி மக்கள் வங்கிக் கிளைக்கு அருகில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் 1.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது இராணுவக் கோப்ரல் ஒருவர் காயமடைந்து போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத வாலிபர் ஒருவர் இராணுவத்தினர் மீது கைக்குண்டை வீசிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதலையடுத்து இப்பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டபோதிலும், எவரும் கைதுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. (ம-க)

## கருணா குழுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய பொறுப்பு எமது விடுதலைப் புலிகளுக்கு உண்டு. எனவே, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள கருணா அணியினரின் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் திடீர் முற்றுகைத் தாக்குதலை மேற்கொள்ள வேண்டியுள்ளது.'' - என்றும் அன்ரன் பாலசிங்கம் அந்தச் செவ்வியில் அடித்துக் கூறியிருக்கிறார்.

செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கருணாவின் ஆயுதக் குழு எதுவும் கிடையாது என்று அரசு அடித்துக் கூறி கருணா அணியினரின் ஆயுதங்களைக் களைவதற்கு மறுத்துவிட்டது. இந்த நிலையில் கருணா அணியினரின் ஆயுதங்களைக் களையும் பொறுப்பை தாமே ஏற்பதைத் தவிர புலிகளுக்கு வேறு மாற்று வழி இல்லை.

''ஜெனீவாப் பேச்சின்போது இராணுவத்துடன் இயங்கும் துணைஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைந்து அவர்களை நிராயுதபாணிகள் ஆக்குவோம் என்ற வாக்குறுதி தரப்பட்டது. ஆனால், இந்தத் துணை ஆயுதக் குழுக்களுக்குக் கடிவாளம் போடுவதற்கு அரசு மறுக்கிறது. இதுவும் வடக்கு - கிழக்கில் வன்செயல்கள் பெருகுவதற்கும், சமாதான முன்னெடுப்புகள் முட்டுக்கட்டைக்குள்ளாகி ஸதம்பித்துப்போய் இருப்பதற்கும் காரணங்களாகும்.

**நெருக்கடியான கால கட்டம்**

சமாதான முன்னெடுப்புகள் மிக நெருக்கடியான கட்டத்துக்கு வந்திருக்கின்றன.

இராணுவத்தினரும், அவர்களின் ஒத்தாசையோடு இயங்கும் துணை ஆயுதக் குழுக்களும் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களை கேள்வி நியாயமின்றிக் கொன்று வருகின்றனர். நன்கு திட்டமிட்ட முறையில் இவை அரங்கேற்றப்படுகின்றன. இந்த நிலையில் சமாதானப் பேச்சுப்பற்றி யாரும் சிந்திக்க முடியாது. விடுதலைப் புலிகளும் பேச்சில் பங்குபற்றவும் மாட்டார்கள்.

''இராணுவத்தினரின் ஒத்தாசையுடன் செயற்படும் தமிழ்த் துணை ஆயுதக் குழுக்களுக்குக் கடிவாளம் போட்டு அவர்களைக் கட்டுப்படுத்த அரசு நினைத்தால் அது சாத்தியப்படும். அதேபோல, படையினரின் அத்துமீறல் செயற்பாடுகளையும் அரசு கட்டுப்படுத்த முடியும். அப்படியான ஒரு நிலை உருவானால் மட்டுமே பேச்சை ஆரம்பிப்பதற்கான சுமுகமான சூழ்நிலையும் உருவாகும்.''

- இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் இந்த மின் அஞ்சல் செவ்வியில் தெரிவித்திருக்கிறார். (ம-க)

## ஏ-9 பாதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, யாழ். குடாநாட்டில் இராணுவத்தினருக்கு எதிராக மக்கள் மேற்கொள்ளும் போராட்டங்களை நிறுத்துவதற்கு விடுதலைப் புலிகள் உறுதி மொழி தந்தால் மட்டுமே ஏ-9 வீதி போக்குவரத்துக்குத் திறக்கப்படும் என்று அரச சமாதானச் செயலகம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாக புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு அறிவித்திருந்தது என்று நேற்று செய்தி வெளியாகியிருந்தது.

எனினும் அப்படிப்பட்ட உத்தியோகபூர்வ கோரிக்கை எதனையும் தாம் புலிகளுக்கு அனுப்பவில்லை என்று அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஹோகன்ன நேற்றிரவு தெரிவித்தார். இருப்பினும் ''விடுதலைப் புலிகள் அவ்வாறு நடந்துகொள்வார்கள்'' எனத் தாங்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றும் கூறினார். (ம)

# இலங்கையில் யுத்தம் மூழ்வதை தடுக்க சர்வதேச சமூகம் தலையிட வேண்டும்!

## யாழ். ஆயர் வேண்டுகோள்

கொழும்பு, மே 9

இலங்கையில் எந்த நேரத்திலும் யுத்தம் வெடிக்கக்கூடும் என்ற அச்சத்தில் மக்கள் உள்ள இந்தவேளையில், இலங்கையில் யுத்தம் மூழ்வதைத் தவிர்க்க சர்வதேச சமூகம் தலையிடவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்கள் மத்தியில் நாட்டின் தற்போதைய நிலை தொடர்பாகக் கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

வடக்கு - கிழக்கிலும், தென்னிலங்கையிலும் தொடரும் படுகொலைகள் மற்றும் கடத்தல் சம்பவங்களால் தமிழ் மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் அச்சமுடன் உள்ளனர்.

எந்த நேரத்திலும் பாரிய யுத்தம் வெடிக்கக் கூடும் என அச்சத்தில் மக்கள் உள்ளனர். இந்த யுத்தச் சூழ்நிலையைத் தவிர்க்க சர்வதேச சமூகம் தலையிட்டு இருதரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தேடுதல் நடவடிக்கையின்போது இராணுவத்தினரால் பல தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. இந்த ஒப்புக்கொள்ள முடியாத நிலை குறித்து சர்வதேச சமூகம் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இருக்கக்கூடாது.

ரணில் ஆட்சிக்காலத்தில் நோர்வே அனுசரணையாளர்களுடன் சர்வதேச சமூகம் தீவிரமாக இணைந்து செயற்பட்டது. அதனால், நான்கு ஆண்டுகால அமைதி ஏற்பட்டது.

ரணில் ஆட்சிக்குப் பின்னர் ஸ்ரீலங்கா அரச தலைவர் தேர்தல் முதல், வன்முறைகள் மீண்டும் தலைதூக்கியுள்ளன. அரச தலைவராக மஹிந்த ராஜபக்ஷ தெரிவானபோது அமைதிக்கான சிறு நம்பிக்கை இருந்தது. அதன் பின்னரான வன்முறைகளால் அது மூழ்கடிக்கப்பட்டு விட்டது. வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரும் வன்முறைகளை அதிகப்படுத்தியுள்ளனர்.

கிளைமோர்த் தாக்குதல்களினால் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இரு தரப்பும்பேச்சுகளுக்குச் செல்லவேண்டும் என்கிற அழுத்தத்திற்கு அப்பால் சர்வதேச சமூகம் செயற்பட வேண்டும். என்றார் அவர்.

## அதி உயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர் சரத் என்.சில்வா, நிஹால் ஜயசிங்க, நிமல் திஸாநாயக்க ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போதே, மேற்படி உத்தரவைப்பிறப்பித்த உயர் நீதிமன்றம் இந்த மீள்குடியேற்ற செயற்பாட்டின் போது 1,476 குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும் பணித்துள்ளது. மனுதாரர் சார்பில் சின்னத்துரை சுந்தரலிங்கம், பாலேந்திரா அஸோஸியேட்ஸின் அனுசரணையின் கீழ் ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனகீஸ்வரன், சட்டத்தரணிகளான எஸ். கணேசலிங்கம், மோகன் பாலேந்திரா, அப்பாத்துரை விநாயக மூர்த்தி ஆகியோர் ஆஜராகினர். (ம-க)

## நாகர்கோவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பகல் வரை இராணுவத்தினர் இவ்வாறு வாகனங்களில் போய்க்கொண்டிருந்தனர்.

நெல்லியடி, மந்திகை, வல்லிபுரக் கோவிலடி ஊடாக நாகர்கோவில் பகுதியை அவர்கள் சென்றடைந்ததாகப் பினனர் தெரியவந்தது.

நாகர்கோவில் காவல் முன்னரங்கையும், இராணுவ முகாமையும் பலப்படுத்தும் நோக்குடனேயே இந்தப் படை நகர்வு நடந்திருக்கிறது என்றும் -

ஊரடங்கு வேளை பார்த்து படையினர் நகர்த்தப்பட்டுள்ளனர் என்றும் - கூறப்படுகின்றது. (ம-க)

## ஊரடங்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் குவிக்கப்பட்டிருந்தனர். போக்குவரத்துச்சேவைகள் உட்பட அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் முடங்கிப் போயின.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணி தொடக்கம் நேற்று மாலை 4 மணி வரை இந்த ஊரடங்கு நடைமுறையில் இருந்தது. சட்டத்தையும், சமாதானத்தையும் பாதுகாப்பதற்காக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது என்று நேற்றுமுன்தினம் இரவு பலாலியிலுள்ள யாழ். பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்தது.

எனினும், கடந்த சனிக்கிழமை இரவு தென்மராட்சி மந்துவில் பகுதியிலுள்ள அம்மன் கோயில் ஒன்றில் நின்றிருந்த இளைஞர்கள் எட்டுப் பேர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக மக்கள் மத்தியில் எழுந்துள்ள கொந்தளிப்பைத் தணிப்பதற்காகவே படையினர் ஊரடங்கை அமுல் செய்தனர் என்று பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து விட்டுப் படையினர் பெரும் தேடுதல் நடவடிக்கைகள் எவற்றிலும் ஈடுபடக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நேற்று அப்படி எதுவும் நடக்கவில்லை என்று தகவல்கள் தெரிவித்தன.

மாலை 4 மணியுடன் ஊரடங்கு முடிவுக்கு வந்தது. அதற்குப் பிறகு - மக்கள் மெல்ல மெல்ல வீதிக்கு வந்தனர்.

ஒரு சில கடைகள் திறக்கப்பட்டன. எனினும், மாலை 6 மணிக்குள் மக்கள் மீண்டும் தமது வீடுகளுக்குள் முடங்கிக் கொண்டனர்.

இதேவேளை -

கடந்த சில நாள்களாக யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வரும் படையினரின் அராஜகங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இங்கு இடம்பெற்று வந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று உச்சக் கட்டத்தை எட்டும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே படையினரின் ஊரடங்கு அறிவிப்பு வெளியானது. (ம-க)

## எண்மர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த மந்துவில் கேலக்கை அம்மன் ஆலயப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தடயங்கள் குறித்தும் அவர்கள் விளக்கமளித்தனர்.

எண்மரும் கொலை செய்யப்பட்ட பின்னர் அவர்களது சடலங்கள் கப்பூது வெளி என்ற இடத்தில் புதர்களுக்குள் மறைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்பட்ட போதிலும் அங்கு எந்தச் சடலங்களையும் தாம் காணவில்லையென்று கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர். (ம-க)

## திருமலையில்...

• (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பி.ஜி. எறிகணைகள் - 04 ஆகியன புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, திருகோணமலையில் சம்பூர் அருகே விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் இடையில் நடந்த மோதலில் 11 பேர் உயிரிழந்தனர் என்று இலங்கை இராணுவத் தரப்பு கொழும்பில் தெரிவித்துள்ளது.

அண்மையில் கருணா குழுவினரின் மூன்று தொடர் முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் இராணுவம் கூறியுள்ளது. புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் அது தெரிவித்துள்ளது.(ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org